# யாதுமாகி...

ஆளுமையின் ஓர் அங்கம்

## முதுகலை & தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்


மலர் – 01 இதழ் – 03 அக்டோபர் – 2023

திருவள்ளுவர் ஆண்டு

2054 (புரட்டாசி – ஐப்பசி)





**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)**

தேசியத் தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் 'A++' அங்கீகாரம் பெற்றது (CGPA 4-க்கு 3.69)

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி – 620020

தமிழ்நாடு, இந்தியா

| | | |
|---|---|---|
| இதழ் | : | **யாதுமாகி** |
| முதன்மையாசிரியர் | : | முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,<br>தேர்வு நெறியாளர்,<br>இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர். |
| இணை ஆசிரியர் | : | முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர் |
| துணை ஆசிரியர் | : | திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர் |
| பொறுப்பாசிரியர் | : | **திரு. வீ.விஜய்**<br>உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை. |
| பிரதி | : | மின்னிதழ் |
| வெளியீடு | : | **அக்டோபர் – 2023** |


-----


**இதழாசிரியர் குழு**

முனைவர் த.செல்வராசு

முனைவர் ஷே.நாகூர்கனி

திரு. கா.முகமது இஸ்மாயில்

முனைவர் மு.சாதிக்பாட்சா

முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்

முனைவர் க.சிராஜுதீன்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

முனைவர் க.இக்பால்

முனைவர் மு.ஹ.ஜஹானாரா

**மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்**

ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்

ஷா.முஹம்மது அஸ்ரின்

ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்

பி.லீ.தயாநிதி

ஷா.முகமது அர்ஷத்

உ.பாபர் முகமது இஸ்மாயில் காஜா

ஜா. முகமது இலியாஸ்

மு.யாசர் அராபத்

மு.முகமது இமாதுதீன்

ரா.பிரீத்தி

ம.தாரணி

செ.ராகவி


-----

விடை தேட சிறிதும்
விருப்பம் கொள்ளா
வெகுசில வினாக்கள்
நீண்டுகொண்டே...
வேடிக்கையாய்
கடந்து விட்ட சில
விளையாட்டாய்
வெட்டிவிட்ட சில
வீணென
விட்டுவிட்ட சில
என விடையின்றியே
விடைபெற்ற
வினாக்கள்
வெகுசில
யார் மீது தொடுக்க
இவ்வினாக்களை?
கடினமென கடந்தோமா?
காரணமின்றி கழன்றோமா?
காலத்தின் கட்டாயமா?
விடை தேடும் வினாக்களாகி
விசைமிகு வினையாகி
யாதுமாகி நிற்கிறது
தமிழ்

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)

யாதுமாகி

## என்னுள் அவள்...



என் மனதை வீணையென
இசைத்தவள் நீயே!
உன் விழியால் என் விழியை
இழுத்தவளும் நீயே!
என்னுள் உன் அன்பை
விதைத்தவளும் நீயே!
உன் புன்னகையால் என் துன்பத்தை
புதைத்தவளும் நீயே!
உன் பேச்சால் என் சோர்வை
வதைத்தவளும் நீயே!
உன் மூச்சால் எனக்கோர் மூச்சை
கொடுப்பவளும் நீயே என் தீயே!!!

**வி.ஹரிஷ்ராஜ்,**
**முதுகலை முதலாமாண்டு.**



## விழிச்சிறை...

என் இதயத்தைக்
கொள்ளையடிப்பதைக்
கொள்கையாக கொண்டவளே..!
கொரோனா போல்
மனங்களைக் கொள்ளையடித்துக்
கொன்று குவிப்பவளே..!
கொட்டிவிடும் பாம்பைப் போல்
எட்ட நின்று பார்த்தேன்
என் விசயத்தைக்கூட
உன் கண் வசம்
இழுத்துக் கொண்டாய்..!
கண்களுக்குக் கருப்பு தீட்டி
மனதிற்குள் கவி மூட்டி
காதல் சிறையில்
கைதியாக பூட்டி விட்டாய்
உன்னைச் சிறையில் இருந்தும்
காதல் கொள்கிறேன்
உன்னைவிட அழகான
உன் விழிச் சிறையில் என்னை
அடைத்ததால்..!

**வே. சிவா,**
**இளங்கலை இரண்டாமாண்டு**



## கடல்

கடல் கரையிடம்
காதல் சொல்லத்
தயங்கி நிற்க
காற்று... அலைகளை
உண்டாக்கி
முத்தமிடச் செய்துவிட்டது ..!



## அருவி

பூமித்தாயின் மகள்
அருவிக்கு இளம் நரையோ?
தன் தலையில்
எத்தனையோ பச்சிலைகள்
பூசி இருந்தும்
அவளின் இளம் நரை
உதிர்ந்து கொண்டுதான்
இருக்கின்றன..!



## சூரியகாந்தி

கிழக்கே கதிரவனின்
வருகையைக்
கண்டு மனம் பூத்தாயோ?
மேற்கே சென்று வரவா?
என்றவுடன் வெட்கத்தில்
தலை சாய்த்தாயோ..!



**மு. முகமது இமாதுதீன்,**
**இளங்கலை இரண்டாமாண்டு**



யாதுமாகி

## தம்பிக்கு ஒரு பாட்டு …



நீ பிறக்கையில்
உன்னை கைகளில்
ஏந்தி
உன் நிலா
நெற்றியில் முத்தமிட
கொடுத்து வைக்கவில்லை
என்றாலும்
உன்னை எத்தனை முறை என்
கைகளால் ஏந்தினாலும்
அந்த ஒரு நாள் போன்று வராது.
உன் சிரிப்பு சத்தத்தில்
குயில்களும் தோற்கும்

குழந்தைகளின் முதல் உச்சரிப்பு
அம்மா…
ஆனால் நீ அழைத்தது
அக்கா…
நீ பேசும் மொழி கேட்டு மலர்
மலர்கிறது ; வளர்கிறது
உனக்கு வயது ஆனாலும் நீ என்
கண்களுக்கு குழந்தை போன்றே
தெரிகின்றாய்.
இப்பொழுது மட்டும் அல்ல
எப்போழுதும் நீ
குழந்தைதான்.
இந்த ஒரு பிறப்பில்
மட்டும் அல்ல எந்த பிறப்பிலும்
நீயே பிறக்க வேண்டும்
என் தம்பியாக …

**செ.ராகவி,**

**இளங்கலை முதலாமாண்டு.**



## வேற்றுமையில் ஒற்றுமை…

வேற்றுமையில் ஒற்றுமை காணுவோம்
மதத்திலும் மாண்புகள் பேணுவோம்
பண்பாட்டின் பாரம்பரிய பரம்பரைகள் –
நாங்கள்
தொன்மை வரலாற்றின் தொல் எச்சங்கள்…

பண்டிகைக் கால பண்டத்தைக் கூட
பகிர்ந்துண்ணும் பண்புடயவர்கள்…

பிரித்தாளும் சூழ்ச்சி செய்தாலும்
மதத்தாலும் பிரித்து வைத்தாலும்
தடுத்தாலும் தாக்கி அழித்தாலும்
விடமாட்டோம் எங்கள் ஒற்றுமையை
கரத்தோடு கரம் கோர்ப்போம்
மனதோடு பலம் சேர்ப்போம்




இரண்டாம் உலகப்போரில்
இரண்டு அணிகள் பிரிந்தாலும்
அணிசேரா கொள்கையிலே
துணிவோடு நின்றோமே
அடுத்த நாட்டு மக்கள் கூட
அண்ணன் தம்பி அக்கா தங்கை…

ஒன்றுப்பட்ட நாடு இது
ஒற்றுமையைத் தேடுது

கூடி வாழும் கூட்டம் இதுதான்
மகிழ்ந்து வாழும் மண்ணும் இதுதான்
மண்ணும் பெண்ணும் எமதிரு கண்கள்
உண்ணும் உணவிலும் ஒற்றுமை உண்டு
எண்ணும் எண்ணம் முழுவதும் கூட
அன்பை நினைத்து
அவனைப் போற்றுவோம்…

**ஷா. முஹம்மது அர்ஷத்**

**முதுகலை இரண்டாமாண்டு.**



## விவசாயி...



உயிரை நிலத்தில் விதைத்து
உழைப்பை பயிராக வளர்த்து
உணர்வை உரமாய் திணித்து
தனது வாழ்வையே அர்பணித்தாய்
தன்னலமில்லா மனிதனாய்
தன்னலமான இவ்வுலகத்திற்கு
தன்னிகரில்லா பொருள் தந்து
தரணியின் பசி துடைத்து
வாழ்வித்தவன்
தாரணியை வளரவைத்தவன்!
வானுயர் பெருமைக்கு உரியவன்!
அவனே விவசாயி.....

ம. தாரணி,
இளங்கலை இரண்டாமாண்டு

## அறிந்து கொள்வோம்...




## கூட்டுறவே நாட்டுயர்வு...

மலரின் ஒறறுமை நறுமணம் கமழும்
தேனீக்களின் ஒற்றுமை தேனாக ஒழுகும்
இதழ்களின் ஒற்றுமை மலராக மணக்கும்
இறகின் ஒற்றுமை சிறகாக பறக்கும்
மனித ஒற்றமையால் மனமும் மாறும்
புனித பாதையில் பூமியும் சுழலும்
நானென்பது நாமென்றால்
நாடும் நலம் பெறும்தானே!
வாழும் வாழ்க்கைக்கு
ஒற்றுமையே பலம்தானே!

மு. இலக்கியா,
இளங்கலை இரண்டாமாண்டு


## நட்பே துணை...

நமக்கொன்னுனா நண்பன் வருவாங்குற
நம்பிக்கை தாங்க நட்பு.....
வையத்தில் மிகவும் வலிமையான
தோள்கள் நண்பனுடையது...!
மகிழ்வில் என் புன்னகையிலும்,
அழுகையில் என் கண்ணீரிலும்
எனக்காக நிற்பவன்.
நண்பன் வைத்த பட்டப்பெயர்
நினைவுக்கு வருகிறது
பட்டப்படிப்பு முடித்த பிறகு.....!
முகம் முகவரி முடிவில்லாதது அது!
உறவெனும் ஊஞ்சல்
சிலரைத் தாங்கும்
சிலரை விழவைக்கும்.....!
இலக்கணம் இல்லாத உறவும்
தலைக்கனம் கொள்ளாத உணர்வும்
நண்பனுடையது......!

க. கார்த்திக் குமார்,
முதுகலை முதலாமாண்டு,

யாதுமாகி

## கடைசி கடிதம் (சிறுகதை)



பாண்டியா… பாண்டியா… என அவன் நண்பன் கிஷோர் அழைத்தான். திரும்பிப் பார்க்காத பாண்டியன் சுவரையே வெறித்துப் பார்த்தான்.

"டேய் என்னடா ஆச்சு உனக்கு"

பாண்டியன் காதில் குண்டு வெடிப்பது போல் இருந்தது. பாண்டியன் திரும்பி கிஷோரையே முறைத்து பார்த்து மீண்டும் சுவரையே நோக்கினான்.

"தன் நண்பன் ஏன் இப்படி இருக்கான்"
என யோசிப்பதற்குள்,
" இல்ல நான் எதுவும் பண்ணல என்ன விட்டுருங்க என குழந்தை போல அழுதான்"
"பாண்டியா உனக்கு ஒன்னும் இல்ல நான் இருக்கேன் எதுக்கும் கவலைப் படாத இந்த சாப்பாடு சாப்பிடு " என ஊட்டினான் கிஷோர், சாப்பிட்டு முடித்த பிறகு கிஷோர் மடியிலேயே தூங்கினான் ,

மறுநாள் காலையில்
பாண்டியன் தன்இருக்கையில் அமர்ந்து, மீண்டும் சுவரை நோக்கினான் திடீரென அருகில் உள்ள பொருள்களை எல்லாம் வீசி உடைத்தான்,
கிஷோர் தடுக்கும் போது பாட்டிலில் ஒரு துண்டு அவன் நெற்றியில் பதம் பார்த்தது,
சுயநினைவுக்கு வந்த பாண்டியன் கிஷோருக்கு மருந்தும் போட்டுகொண்டே

"நான் வேணும்னு பண்ணல நண்பா என அழுதான் "
"டேய் அழ வேண்டியது நான் தான்டா என இருவரும் சிரித்தனர்....
" கவலையை மறந்து சிரிக்கிறது அவ்வளவு சுலபம் இல்ல கொஞ்சம் கொஞ்சமா கவலைய மற". என பேசும் போதே,
சுவரை நோக்கினான்.
சுவரில் ஏதோ நடனம் ஆடுவது போல இருந்தது பாண்டியனுக்கு ....
பாண்டியனை திருத்த முடிவு செய்தான். கம்பீரமான காக்கி சட்டைக்காரர் ஒருவர், "தம்பி கடிதம் என பாண்டியனை அழைத்தார்...
வியப்புடன் அந்த கடிதத்தைப் பார்த்தான் !!!
எனக்கு யாரும் இல்லையே எனக்கு யாரு கடிதம் அனுப்பி இருக்காங்க என யோசித்துக் கொண்டே,
அந்த கடிதத்தை வாங்கினான்.,....
உடனே கிஷோரை கோபமாக அழைத்தான்,

" கிஷோர் கிஷோர் என அழைத்தான் "
" என்னடா என்ன ஆச்சு உனக்கு என்ன பாண்டியா பல் துலக்கி கொண்டே கேட்டான்"
" எனக்கு யாரோ கடிதம் அனுப்பி இருக்காங்க யாருன்னு தெரியல எனக்கு ஒரே குழப்பமா இருக்கு எனக்கு யாருமே இல்ல ஆனா இந்த கடிதம் எப்படி வந்துச்சு?...."

கிஷோர் சிரித்துக்கொண்டே, "அத படி உனக்கே தெரியும்" என தப்பித்து ஓடினான் கிஷோர்.....
அதை பிரிக்க மனம் எண்ணியது ஆனால் பாண்டியன் கடிதத்தை கிழிக்கும் முயன்ற போது,
அதில் ஐ லவ் யூ என எழுதி இருந்தது,
அதிர்ந்து போன பாண்டியன் மனதில் பேச்சால் மெல்ல மெல்ல அந்த கடிதத்திற்கு விடுதலை கொடுக்க,
அந்த கடிதத்தில்..,......

ஹாய்! என் பேரு சினேகா நான் உங்கள ரொம்ப நாளா பாலோ பண்றேன் நீங்க

கண்டுக்கிறதே இல்ல நீங்க இல்லாம என்னால வாழ முடியாது,
யாரைப் பார்த்தாலும் உங்களை பார்க்கிற மாதிரியே இருக்கு சுவரை பார்த்தாலும் உங்க ஞாபகமா தான் இருக்கு நம்ம கல்யாணம் பண்ணிக்கலாமா?
பதில் கடிதம் போடுவீங்களா.....?
உங்க கடிதத்திற்கு மனம் ஏங்குது......
அன்புடன் சினேகா.

" சினேகாவா "
யாரு இந்த பொண்ணு எனக்கு தெரியவே தெரியாது என மனதிற்குள் ஆயிரம் குழப்பங்கள் கும்மி அடித்தன.....
மனதிற்குள் பட்டாம்பூச்சிகள் பறக்க தொடங்கின.......

இரவு முழுவதும் பதில் கடிதாசி எழுதினான்,
கிஷோரிடம் "போஸ்ட் ஆபீஸ் எங்க இருக்கு நான் போகணும்..... என்றான்...."

காக்கிச்சட்டைக்காரர் ஒருவர் பாண்டியனை இழுத்துச் சென்று மேலதிகாரியிடம் "

"சார் இவன் பேர் பாண்டியன் தூக்கு தண்டனை கைது இன்னைக்கு தான் இவனுக்கு தூக்கு வேலையை ஆரம்பிக்கலாமா சார் "
என கேட்டார்......

மனதிற்குள் சாரி பாண்டியா நீ இப்படி இருக்கிறத என்னால பார்க்க முடியல. அதான் இந்த கடிதத்தை நானே எழுதினேன் பாண்டியா என அழுது புலம்பினான்......கிஷோர்.

அ. ரியாஸ் முகமது,
முதகலை இரண்டாமாண்டு.









வாசனை திரவியம். நம்மில் பல பேருக்கு சிறு வயது முதலே அதன் மீது அளவில்லா ஈர்ப்பு உண்டு. ஆடையில் தேய்த்த பிறகு ஒரு புத்துணர்ச்சியும் தெம்பும் உண்டானது போல தோன்றும்.

இந்த கதையில் வரும் கதாநாயகன் உலகின் மிகச் சிறந்த வாசனை திரவியத்தை கண்டுபிடிக்க, நாடு கடந்து சென்று பல அழகிய பெண்களை கொல்கிறான்.

Perfume : The story of a Murderer

1985 ல் புத்தகமாக வெளிவந்த இந்த நாவல், 49 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, 20 மில்லியன் பிரதிகள் விற்கப்பட்டது. 2006 ம் ஆண்டு இந்த நாவல் திரைப்படமாக எடுக்கப்பட்டது.

இந்த நாவல், திரைப்படமாக உருவெடுத்த போது உலகம் முழுக்க பார்க்கப்பட்ட ஒரு சிறந்த திரைப்படமாகவும் ஆனது.

பிறந்த இடமே ஒரு மீன் சந்தை. பிறந்து சில நொடிகளிலேயே மீன்களோடு மீன்களாக துர்நாற்றத்தில் தவழும் அந்த குழந்தை, வளர்ந்து வருவதும் அந்த தெருவில் கிடைத்ததை உண்டு தான். அவன் பிறக்கும்

போதே ஒரு ஆற்றலுடன் பிறக்கிறான். நுகரும் ஆற்றல் இங்கிருந்து கொண்டே பல தெருவிற்கு அப்பால் உள்ள தின்பண்டங்களின் மணத்தை அவன் நுகர்வான். அருகில் உள்ளவர்களின் கூடையில் என்ன உள்ளதென்று பார்க்காமலே, நுகர்ந்து அவனால் சொல்ல முடியும்.

பதின் பருவத்தை அடைந்தவுடன், இது வரை அவன் வாழ்வில் நுகராத ஒரு மணம் அவன் மூக்கிற்கு எட்டும்.! பெண்ணின் ஸ்பரிசம் இயற்கையாக அமைந்த அந்த மணம் அவனை ஈர்க்கும். அப்போது நினைப்பான், உலகின் தலை சிறந்த வாசனை திரவியத்தை உருவாக்க பூக்களை விட பெண்ணின் ஸ்பரிசம் உகந்தது.! அதற்கு அவன் எடுக்கும் முயற்சியே, மீதி கதை.

படத்தில் பொழுது போக்கு அம்சங்கள் இருந்தாலும் கூட, வாழ்க்கையின் விளிம்பிற்கு சென்று, திரும்பி பார்த்தால் நாம் செய்த நற்காரியங்கள் நமக்கு பின்னால் பிரகாசிக்க வேண்டும்.

இல்லையெனில் இறப்பை கூட வற்புறுத்தி வர வைக்க வேண்டும் என்ற படத்தின் கருத்து பார்ப்பவர்களின் மனதை ஒரு நிமிடம் உலுக்கும். நிச்சயமாக!

உலகின் தலை சிறந்த படங்களின் வரிசையில் இந்த படமும் நிற்கும்.

**லா. முகமது யூசுப்,**
**முதுகலை இரண்டாமாண்டு**



## சொன்னது யார்?

தீதும் நன்றும் பிறர்தர வாரா . . .
(புறநானூறு, கணியன் பூங்குன்றனார்)

## புகைவண்டியா? புதையல் வண்டியா? (சிறுகதை)



கவிக்கோ அப்துற் ரஹ்மான் சொல்லுவதைப் போல நானும் சொல்லிப் பார்த்தேன் புகை வண்டியில் அறுபத்து ஐந்து ரூபாய் குடுத்தும் கழிப்பறைால் அருகில் நின்றுச் சொன்றது அறமா, நிப்பதற்க்கு இடம் இல்லை என்று தெரிந்தும் மது அருந்தி மற்றொருவருக்கு இடம் தந்தது அறமா, மதுபோதயில் உறங்கியவர் உடைகள் கழண்ட போது கழிப்பறைக்கு வந்த ஒருவர் அவரின் உடை (வேட்டி) சரி செய்தது அறமா!.

அன்று எனது மனதில் ஒரு சிந்தனை பல நாட்கள் கழிந்தும் புகைவண்டியில் பயணிந்து நண்பரிடம்.

டேய்! இரயில் வே ஸ்டஷனுக்கு வந்து என்னை இறக்கி விடுடா.

பழனியில் இருந்து திருச்சிராப்பள்ளிக்குச் சல்ல வேண்டும் பழனியில் இருந்து திண்டுக்கல் பிறகு திண்டுக்கல் இருந்து திருச்சிராப்பள்ளி சொல்லலாம் என்னும் முடிவு எடுத்து பழனி புகைவண்டி நிலையத்தில் வந்து.

4:40க்கு வரும் மதுரை விரைவு வண்டி திண்டுக்கலுக்கு ஒரு டிக்கேட் தங்க என்றேன்.

முப்பத்து ஐந்து ரூபாய் குடுங்க என்றார் டிக்கெட் பணம் வசூலிப்பவர். நான் நூறு ரூபாய் கொடுத்தேன் பிறகு மீதி அறுபத்து

ஐந்து ரூபாய் கொடுத்தார். வாங்கிவிட்டு முதல் நடை மேடைக்கு வந்தேன். புகை வண்டி வருவதற்கு தாமதம் ஆனது நான் நினைத்த நேரம் மாலை 4:40 வரும் திண்டுக்கல் இருக்கு மாலை 5:50 சென்று விடலாம். பிறகு திண்டுக்கலுக்கு சென்று 6:15 மணிக்கு சென்னை விரைவு வண்டியில் ஏறி 7:48 திருச்சிராப்பள்ளி வந்து விடலாம் என்று நினைத்திருந்தேன்.

அபபோது ஒரு மாற்றம் ஏற்ப்பட்டது. இரயில் வருவதற்கு தாமதம் ஆகும் போல என்று தெரிந்தது. அருகில் இருந்த சிலர் முணு முணுத்தனர். அப்போது இரயில் வரும் திசையையும் எதிர் திசையையும் இரண்டு மூன்று முறைப் பார்த்தேன்.

நேரமும் கடந்தது பிறகு சில மணிநேரத்தில் தூரத்தில் ரயில் சத்தம் கேட்டது. ரயில் வரும் திசை நோக்கி நானும் சேர்ந்து இன்னும் பலர் பார்த்தனர். அப்போது ஒரு அழகிய கேரளத்து பெண் பாலக்காடு ரயில் எப்போது வரும்? எந்த கம்பட் மண்ட்? எனக்கு தெரியாது என்றான். அருகில் இருந்து வயது முதிர்ந்த பெரியவர் கழுத்தில் மாலைகள் அணிந்து இருந்தார். அவரைப் பார்பதற்க்கு சாமியார் போலவும். பேச்சுக்கள் இருந்தது.

ரயில் எனது அருகே வந்தச் சத்தம் கேட்டது. ஒவ்வொரு போட்டியாக என்னை கடந்தது. சிறிது தூரம் சென்று நின்றது எனக்கு அருகில் இருந்தப் பெட்டியில் ஏறினேன் எனக்கு அருகில் இருந்தவர்கள் ரயிலில் முதல் இரண்டு பெட்டிக்கும் கடைசி இரண்டு பொட்டிக்கு மக்கள்ச் சொன்றார்கள் அப்போது எனக்கு தெரியவில்லை. நான் எடுத்தது பொதுப் பொட்டி டிக்கெட் நான் ஏறியது முன்பதிவு பொட்டி மக்கள் அதிகம் இல்லை இருக்கை இருந்தும் அமரவில்லை படி அருகில் இருந்து இயற்கை காற்று வசமும் மாறி வரும் இயற்கைச் சூழலும் மழை பொழியும் காட்சிகளும் எனது காதுகளில் கேட்ட பழமையான பாடல் வரிகளும் இந்த உலக அழகுகளை என்னைப் போல் ரசித்தவர் யாரும் இல்லை. அப்படி இருந்தது.

ஒவ்வொரு ஊர்களிலும் பயணிகள் இறங்கவும் செய்தார்கள். ரயில் ஏறவும் செய்தார்கள். மூன்று நான்கு ஊர்களில் நின்று பிறகு திண்டுக்கலுக்கு வந்தது என்று நினைத்தேன் ஊரின் எல்லையில் சிறிது நேரம் ரயில் நின்றது. ஒருவர் வந்து மணி எத்தனை என்றார். 6.15 என்றேன்.

மணி பார்த்ததும் 6:15 மணிக்கு திருச்சிராப்பள்ளி இரயில் வந்து விடுமே என்று எண்ணினேன்! சில நிமடத்தில் இரயில் எடுக்கப்பட்டது.

திண்டுக்கலில் மிகவும் மழைப் பொழிந்ததுப் போலவும் தோற்றம் இருந்தது குழு குழுவென்று காற்று வீசியது மெல்ல நிண்டது இறங்கி வேகமாக சென்று டிக்கெட்டு எடுக்கச் சொன்றேன் அப்போது 6.27 மனி இருந்தது. திண்டுக்கல் முதல் திருச்சிராப்பள்ளி வரையும் செல்லுவதற்கு டிக்கெட் கேட்டேன். அறுபத்து ஐந்து ருபாய் என்றார் பணம் வசூலிப்பவர்.

மிதி இருந்த பணத்தை எடுத்தால் அறுபத்து ஐந்து ருயாய் இருந்தது. குடுத்து விட்டு டீக்கெட் எடுத்தேன் நடை மேடை மூன்று என்றார்கள் வேகமாகச் சென்றேன்.

இரயில் எதுவும் இல்லை . நடந்து வந்த காவலரிடம் கேட்டேன் திருச்சி இரயில் எப்போது வரும் என்றேன் சார் இப்போது தான் அந்த இரயில் சென்றது என்றார். சார் இப்போது நான் பழனியில் இருந்து வந்த இரயிலில் இருந்து இறங்கி டிக்கேட்டு எடுத்து வந்தேன் என்றேன்.

சார் இப்போது என்ன செய்வது என்று கேட்டேன் ஒன்றும் செய்ய முடியாது. எட்டு மணிக்கு வேறு ஒரு ரயில் வரும் அதில் ஏறிச்செல்லு என்று செல்லிவிட்டு சொன்றார்.

எனது கையில் இருந்து கடிகாரநத்தைப் பார்த்தே ஆறு முப்பது மணி என்று இருந்தது.

பார்த்து விட்டு இரயில் நிலையத்தில் நுழைவாசல் வரையும் சென்றேன் என்னச் செய்வது என்று தெரியாமல். படியில் அமர்ந்தேன் டீ விற்பவர் பின் இரண்டு நாய்

குட்டிகள் வந்தது அவர் எனக்கு பின் ஒரு ஓரமாக

டீ ஊத்தினார் இரண்டு நாய் குடிக்க வாய் வைத்தது. சுட்டதும் வாய் வேகமாக எடுத்தது மீண்டும் வைத்தது இரண்டு மூன்று முறை வைத்தது பிற்கு சூடு குறைந்ததும் குடிக்கத் தொடங்கியது.

அந்த நாய் குட்டிகளை பலரும் பார்த்து இடது வயது புறமும் மக்கள் நாடந்து கொண்டு இருந்தார்கள் நானும் மொல்ல நடந்து முதல் நடைமேடையில் இருந்து மூன்றாவது நடைமேடைக்கு வந்தேன். 40 வயதுக்கு மேல் இருக்கும் ஒரு ஆணும், பெண்ணும் என் அருகில் வந்து சென்னை டிரைன் எப்போது வரும் என்று கேட்டதும்.

எனக்குத் தெரியாது நானே ஆறே கால் மணி ரயிலை விட்டுடேன். என்றதும் நங்களும் தான் தம்பி விட்டுவிட்டேன் எட்டு மணிக்கு ஒரு டையின் வரும் என்று ஒலி பெருக்கியில் ஒலித்துக் கொண்டு இருந்தது. கேட்டுக் கொன்டே எனக்கு இடது புறம் மெல்ல நடந்து பயணிகள் கத்து இருக்கும் இருக்கையில் வந்து அமர்ந்தேன்.

"மழை சிறு சிறு துளிகள் தூரிக்கொண்டு இருந்தது குலுகுலுவென்று காற்று வீசியது". இருக்கும் சூழலில் படுத்தால் நல்ல இருக்கும் என்று மனதில் ஒரு எண்ணம்? அருகில் ஒரு முதியோர் அமர்ந்து செய்தித்தாள் படித்துக் கொண்டு இருந்தார். நானும் செய்திதாளை எட்டிப் பார்த்தேன். எழுத்துக்கல் சிறியதாக இருந்ததால் படிக்க முடியவில்லை.

எனது பையில் கடைசி ஜிப் திறந்து. கை உள்ளே விட்டேன் கையில் சில எழுதிய தாள், சில மதிப்பெண் சான்றிதழ்கள், குட்டி நோட் சில மீடடாய் கிடந்ததன.

மிட்டாய் எடுத்து வாயில் போட்டு விட்டு. காயிதங்கள் எடுத்தேன். வகுப்புகளில் ஆசிரியர் பாடம் எடுக்கும் போது கிறிக்கிய விசையங்கள் சில குறிப்புகள் இருந்தது.

அப்போது ஒரு முறை உணவகத்துக்குச் சென்ற கவிக்கோ. அப்துர் ரகுமான் உணவு அருந்தி விட்டு பணம் சொலுத்த போகும் போது மணிபர்ஸ் கணம் என்று சொல்லிய போது உணவகத்தில் பணம் வசூலிப்பவர் சொல்லுவார், 'உனது உடை கழட்டி விட்டு வீட்டில் போய் பணம் எடுத்து வா' அவரும் சட்டை (குறுத்தா) கழட்டி வைத்து விட்டு. செல்லலாம் என்று நினைத்த போது உனது வேட்டியும் வைத்து விட்டு போ என்றார். அப்போது அங்கு இருக்கும் மக்கள் எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தவர்கள். எதுவும் உதவி செய்ய வில்லை. ஒருவன் மட்டும் வந்து சில ரூபாய் குடுத்து விட்டு உணவகத்துக்கு வெளியே அழைத்து வந்தார். கவிக்கோ இல்லை தம்பி நான் பணம் வைத்து இருந்தேன் இப்போது இல்லை என்றார் அருகில் இருந்தவர். பையில் இருந்து பணம் வைக்கும் பர்ஸ் எடுத்தார் கவிக்கோ எடுக்கவில்லை. எதுவும் எனது இல்லை என்றார். ஆனால் எனது பர்ஸ் இருந்தது. இங்கு பலர் இருந்தார்கள் எவரும் உதவ வில்லை. இவன் திருடன் என்றாலும் எனது மானம் காப்பாற்றியவன் அல்லவா நான் எடுக்க வில்லை. என்ற குறிப்பு இருந்தது.

*தொடரும்...*

**உ. பாபர் முகமது இஸ்மாயில் காஜா,**
**முதுகலை இரண்டாமாண்டு**

## பழமொழி அறிவோம்!

**கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை**

(சரியான விளக்கம்)

**"கழு தைக்க தெரியுமாம் கற்பூர வாசனை"**

*கழு எனும் ஒருவகைக் கோரைப்புல்லில் இருந்து தைக்கப்படும் பாயில் கற்பூர வாசனை வெளியாகும். இதுவே பின்னாளில் மருவியது*

## முருகப்பெருமான்



**ஆர். செந்தில்**

**இளங்கலை மூன்றாமாண்டு**

## கற்பனை



**செ. ராகவி,**

**இளங்கலை முதலாமாண்டு**

## அருவி



**மு. கிருத்திகா,**

**இளங்கலை முதலாமாண்டு**

## வருமுன் காப்போம்




**த. மோகன தாரணி**

**இளங்கலை மூன்றாமாண்டு**

## என்றென்றும்



**அ. ஹாஜிரா பானு,**

**இளங்கலை முதலாமாண்டு**